<u>சாட்சிகளின் வாக்குமூலம்.</u>

<u>பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.</u>

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.</u>

<u>அசல் வழக்கு எண்.63/2018</u>

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - | வா.சா.1 | தொடங்கும் நேரம் | : 11.28 a.m. |
| | | | முடிவுறும் நேரம் | : 11.38 a.m |
| பெயர் | : | செல்லப்பா | மதம் | : |
| த/பெ. | : | பார்சுவநாத நயினார் | தொழில் | : |
| கிராமம் | : | | வயது | : |
| தாலுக்கா | : | | நாள் | : 25.06.2025 |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 25ஆம் நாள் சாட்சியம்.

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதியாவேன். இந்த தாவாவை நான் குடும்ப மேலாளர் என்ற தகுதியின் அடிப்படையில் எனது சகோதர சகோதரிகளுக்காகவும் சேர்த்து குடும்பத்தில் மூத்தவர் என்பதால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணைக்காக முதன்மை சாட்சிய சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. கீழ்கண்ட ஆவணங்கள் என் தரப்பில் தாக்கல் செய்யப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| **01.** | **19.05.1956 தேதியிட்ட கிரயப்பத்திரம் - அசல்.** | **வா.த.சா.ஆ.1.** |
| **02.** | **05.03.2018 தேதியிட்ட தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ் - அசல்.** | **வா.த.சா.ஆ.2.** |
| **03.** | **06.07.2006 தேதியிட்ட கிரய ஆவணம் - சான்றிட்ட நகல்** | **வா.த.சா.ஆ.3.** |
| **04.** | **07.11.2013 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் - சான்றிட்ட நகல்** | **வா.த.சா.ஆ.4.** |

மேற்படி வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக்கொள்கிறேன். **வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேறு ஒரு வாய்தாவிற்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

ஓம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.